ஈழத்தமிழ்ச் சங்கம் விக்டோரியா

**EELAM TAMIL ASSOCIATION VICTORIA**

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பு

TAMIL SCHOOL BOARD

# Curriculum Standard Framework Levels 5 & 6

P.O BOX 568
Glen Waverley 3150
Victoria, Australia

# Level 5

இத்தரத்தில் மாணவர்கள் கட்டிளமை உலகிற்குரிய அனுபவங்கள் தொடர்பானவையாகவும் ஏனைய பாடங்களிலிருந்து பெறப்பட்ட அல்லது தொடர்பு சாதனங்கள் மூலம் பெறப்பட்டனவையுமான பொதுக்கவனத்தை ஈர்க்கக்கூடிய தலைப்புக்களில் தமிழை விளங்கிக் கொள்ளவும் பயன்படுத்தவும் வல்லமை பெறுவர். தமது சொந்தக்கருத்துக்களை உதாரணமாகக் குடும்பவிவகாரங்கள், நாளாந்த வாழ்க்கைச் சம்பவங்கள், ஓய்வுநேர நடவடிக்கைகள், பொழுதுபோக்கு அம்சங்கள், விருப்புக்கள் அல்லது அபிப்பிராயங்கள், யோசனைகள், உணர்வுகள், திட்டங்கள் முதலானவற்றை உரையாடல் மூலம் அல்லது எழுத்து மூலம் பிறருடன் பரிமாறும் ஆற்றலைப் பெறுவார்கள். இத்தரத்தில் தமது தொடர்பு கொள்ளும் வழிகளில் ஒன்றாகத் தமிழையும் இணைத்துக் கொள்வார்கள். வழமையாகத் தமிழ் மொழியில் தொடர்புகொள்ளும் போது ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் அளவைக் குறைத்துக் கொள்வார். தலைப்புக்களையும், தம்முடன் உரையாடுபவரையும், உரையாடப்படும் விடயத்தின் அமைப்பையும் மாற்றுவதற்கும் பிரதான விடயங்களையும் விபரங்களையும் வேறுபிரித்தறியவும் வல்லமை பெறுவார். காலவேறுபாடுகளுக்கேற்ப வினைச்சொற்களை மாற்றிப் பயன்படுத்தவும் வழமையானவற்றைவிட வேறுபட்ட வினைச்சொற்களைப் பயன்படுத்தவும் தெரிந்துகொள்வர். இவ்வினைச்சொற்களுக்கு ஏற்ப எழுவாய்களைப் பயன்படுத்தவும் எழுவாய்களுக்கேற்ப வினைச்சொற்களைப் பயன்படுத்தவும் வல்லவராவர். உ–ம் நீ பாடசாலைக்கு வந்தாய், அவை கூட்டுக்குள் சென்றன. இணையத்தளங்களிலிருந்து செய்திகளைப் பெறவும், தாம்பெற்ற செய்திகளைத் தேவைக்கேற்பச் சீர்செய்து பயன்படுத்தவும் வல்லமை பெறுவர். அகராதிகளையும், உசாத்துணைகளையும் பயன்படுத்துவர். சொற்களின் அமைவு மொழிநடையின் ஒரு பகுதி என்பதையும் இலக்கண எண்ணக்கருக்கள் குறிப்பிட்ட வரையறையான செயற்பாடுகளைக் கொண்டன என்பதையும் அறிவார். ஆனால் , ஆகையால், அதாவது முதலிய சொற்கள் இடத்திற்கிடம் வேறுபட்ட கருத்துக்களைத் தருகின்றன என அறிவார். ஆங்கில மொழியமைப்புக்கும் தமிழ்மொழியமைப்புக்கும் உள்ள பிரதான வேறுபாடுகளை எழுவாய்–பயனிலை–செயப்படுபொருள் → ஆங்கிலம் எழுவாய்–செயப்படுபொருள்–பயனிலை → தமிழ்

தமிழ் பேசும் நாடுகளைப் பற்றியும் அவற்றின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள். கலாச்சாரங்கள் பற்றியும் அந்நாடுகளில் காலத்திற்குக்காலம் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் தமிழர் தாயகங்களிலும், தமிழ்பேசப்படும் ஏனைய நாடுகளிலும் இவ்வகையான மாற்றங்கள் எவ்வாறு நிகழுகின்ற என்பது பற்றியும் அறிவதுடன் உதாரணங்களுடனும், காரணங்களுடனும் இவற்றை விளக்குவர். தமிழ்பேசும் நாடொன்றுக்குச் செல்லக்கூடிய ஒருவருக்குத் தேவையான அடிப்படைத் தகவல்கள் கொண்ட ஒருபட்டியலைத் தயாரிப்பதற்குப் போதிய அறிவைப் பெற்றுக் கொள்வார். இதற்குத் தேவையான வினாக்களைக் கேட்கும் தகைமை பெறுவார்.

## Level 5

### Context of language use

இந்த தரத்தில் மாணவர்களின் மொழிபயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் கட்டிளமைப்பருவ அனுபவங்கள் தொடர்பானவையாகவும் ஏனைய பாடங்களிலிருந்து பெறப்பட்ட அல்லது தொடர்பு சாதனங்கள் மூலம் பெறப்பட்டவையுமான தலைப்புக்களில் தமிழை விளங்கிக் கொள்வனவாகவும் அமையும்.

### Tasks

இத்தரத்தில் செயற்பாடுகள் இரண்டிற்கு மேற்பட்டவர்களுடன் அல்லது எதிர்பாராத சந்தர்ப்பங்களில் உரையாடும் செயற்பாடுகளைக் கொண்டவையாக அமையும். ஆங்கிலத்தில் கற்ற அறிவு, பொதுவான விடயங்கள் பற்றிய அறிவு, திறன்கள் என்பன இடமாற்றம் பெற்றுத் தமிழில் பயன்பெறும், சொந்தமாக எழுதுவனவும், விளம்பரம், இணையத்தளம்(Web page ) துண்டுப்பிரசுரம், ஈமெயில் முதலாவற்றைப் பயன்படுத்திக் கற்பர், உருவாக்குவார். தெரியாத சொற்கூட்டங்களின் கருத்துக்களை அறிவர். விளங்கிய சொற்கள் வாக்கியங்களப் பயன்படுத்தி இவற்றை அறிவர் தெரிவுகளைச் செய்யவும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் மிக அதிகளவிலான செய்திகளையும் பலவிதமான தகவல்களையும் பயன்படுத்தல் வலியுறுத்தப்படுகிறது. எழுதும் செயற்பாடுகள், கதைகள், பாடல்கள். செய்திகள், சுருக்கமான அறிக்கைகள் முதலானவற்றை பாடசாலைச் சஞ்சிகை, செய்திப்பத்திரிகை, விளம்பரப்பலகை ஆகியவற்றுக்கு எழுதுவதாக அமையும்.

### Texts

பந்திகள் வேறுபட்ட அளவுகளில் அமையும் இவை அமைப்புக்கும், அறிந்திராத சொற்கள், மொழிக் கடினத்தன்மை, அல்லது இலகுதன்மை மாணவருக்கு அறிமுகமான/ அறிமுகமில்லாத தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் பந்திகளைத் தெரிவுசெய்யும் போது மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொள்வர். உதாரணமாக பெரிய பந்திகளாயின் கடினத்தன்மை குறைவாகவும் கடினத்தன்னை கூடுதலாக இருப்பின் சிறிய பந்திகளாக அமைதல் வேண்டும்.

மாணவர்கள் வெவ்வேறு தேவைகள் நோக்கங்களுக்கு வெவ்வேறு விதமான பந்திகள் பயன்படுத்தப்படுவதைக் கற்பர். இவற்றை அமைக்கவும், இவற்றிற்கு விளக்கமளிக்கவும் வல்லவராவர். இப்பந்திகள் உண்மையான செய்திகளைக் கொண்டனவாகவோ, அல்லது கற்பனையில் ஆக்கப்பட்டவையாகவோ இருக்கலாம்.

## கேட்டல் 5.1

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள் (Indicators) | உபகரணங்கள் | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| மாணவர்கள் எழுதப்பட்ட அல்லது கேட்கப்பட்ட, உரையாடப்பட்ட,( பேட்டிகள், கலந்துரையாடல்கள்) விடயங்கள் தொடர்பாகப் பூரணமான மொத்தக் கருத்துக்களையும் அறிந்து கொண்டு சிறிய பிரச்சனைகள், வினாக்களைக் கொடுத்தபோது அவற்றிற்கு விடை/ தீர்வுகாணவும், தீர்வுக்கான காரணங்கள், ஆதாரங்கள் கூறவும் அவற்றிற்கு மேலும் கருத்துக்களைச் சேர்க்கவும் வல்லவராவர். இக்கருத்துக்கள் பற்றிய தமது கொந்த அபிப்பிராயங்களையும் கூறக்கூடியவராவர். | மாணவர்கள் இந்த செயற்பாடுகளை அடைவதற்குப் பொருத்தமான பந்திகள், வாக்கியங்கள், கட்டுரைகள், தரமான வினாக்கள் பிரச்சனைகள். | மாணவர்கள் தமது மொழியறிவை பந்திகளின் மூலக் கருத்துக்களை அறிவதற்குப் பயன்படுத்துவர். இறந்த, நிகழ். எதிர், ஏனைய ஆங்கில இலக்கணத்தில் உள்ள காலங்களைப் பயன்படுத்தவும், விளங்கவும் வல்லமை பெறுவர். விரிவாக எழுதப்பட்ட ஒரு பந்தியில் இருந்த பிரதான கருத்துக்கள் தகவல்களை அடையாளம் கண்டு அவற்றை ஒழுங்குபடுத்தவும் ஒப்பிட்டுப் பார்க்கவும் கூடியவராவர். குறிப்பிட்ட பந்திகளில் இருந்து குறிப்பான கருத்துக்கள் அபிப்பிராயங்களையும் காரணங்களையும் அடையாளங்காணுவர். வினா ஒன்றை அல்லது பிரச்சனை ஒன்றை வழங்கும் போது, அதனைத் தீர்ப்பதற்கு, அல்லது விடைதருவதற்கு பந்தியிலிருந்து பெற்ற தகவல்களிலிருந்து விளக்கமளிக்கவும், விபரிக்கவும் இது தொடர்பான தனது சொந்த அபிப்பிராயத்தைக் கூறவும் இயலுமானவராவர். | சஞ்சிகைகள் பத்திரிகைகள் தமிழ்பேசும்நாடுகளின் அல்லது அவுஸ்திரேலியாவின் பிரச்சனைகள்– மதம், போர், அரசியல் தனிநபர் தொடர்பில்லாதன | |

**பேசுதல் 5.2**

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள். ( Indicators) | உபகரணங்கள். | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| பொருத்தமான தலைப்புக்களில் வகுப்பில் நடைபெறும் உரையாடல்களின் போது அல்லது வகுப்பில் ஏதாவது பொருத்தமான தலைப்பில் உரையாற்றும் போது அல்லது வகுப்பில் விவாதம் ஒன்றில் ஈடுபடும் போது தனது ஞாபகத்திலிருந்து, தனக்குத் தெரிந்த விடயங்களை, அனுபவங்களை அவை தற்போது நடைபெறுவனவாக இருந்தாலென்ன குறிப்பிட்ட தலைப்புக்கள் தொடர்பாக தனது கருத்துக்களை தகவல்களை முன்வைத்துப் பேசவும், அவ்வாறு பிறர் உரையாற்றும் போது விளங்கிக் கொண்டு வினாக்களைக் கேட்க. தொடர்ந்து தகவல்களைப் பெறவேண்டும். | விவாதம், பட்டிமன்றம், பொருத்தமான உரைகள், பொருத்தமான உரைத்தலைப்புக்கள் பேச்சுத் துணுக்குகள் நடைமுறையில் விவாதங்கட்கு உட்படும் செய்திகள். | • உரையாடல், விவாதத்தின் போது ஆகக் குறைந்தது ஆறு பரிமாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாகக் கருத்துக்களை ஒழுங்கு செய்து பேசுவார்.<br>• ஒன்று–இரண்டு நிமிட உரையாற்றல்களை மேற்கொள்ளும் போது தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களை முதலில்,....பின்பு ....அதற்குப் பிறகு ....முடிவில் என்ற வகையில் ஒழுங்குபடுத்திப் பேசுவார்.<br>• இவ்வாறான உரைகளின் போது இவை தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பெற வினாக்களைப் பெற அல்லது பிறரது வினாக்களுக்கு தான் விடைகூறவும் வல்லவராவார்.<br>• தனது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார். உ–ம் “ஏனெனில் அவருக்கு உடனலக்குறைவு”<br>• உரையாடல்களைப் பொருத்தமான வகையில் ஆரம்பிக்கவும், நிறைவு செய்யவும் இயலுமானவராவர்.<br>• உரையாடலின்போது பொருத்தமான முறையில் உரையாடலைத் தொடரும் வகையில் “நீங்கள் கூறியதற்கு விளக்கம் கூற இயலும்” என்றவாறான உத்திகளைக் கையாளுவார். | பத்திரிகைகளின் தலைப்புக்கள், ஆசிரியத்லையங்கங்கள். Audio cassets | |

**வாசிப்பு 5.3**

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள். (Indicators) | உபகரணங்கள். | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| கற்பனைக் கதைகள்<br>ஆக்கங்களை வாசித்து / வாசிக்கும்போது பிரதான பாத்திரங்கள்பற்றி, பிரதான சம்பவங்கள்பற்றி, முக்கியமான கருத்தைப்பற்றி ( Theme) விளக்கம் பெறவேண்டும்.<br>பல தகவல்களைக் கொண்ட பந்தியில் இருந்து அதன் சாரத்தை அறிந்து கொள்வார்.<br>இச்சாரத்தை /மூலக்கருத்தை வினாக்களுக்கு விடையளிப்பதற்கு, பிறருக்கு ஆலோசனைகள் கூறுவதற்கு, தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்துவார். | வேறுபட்ட Informative, Peruasive, கட்டுரைகள் பந்திகள்.<br>பிரச்சனைகள், தகவல்கள் கொண்ட பந்திகள், கட்டுரைகள். | • உச்சரிப்பு, ஏற்ற இறக்கம் என்பவற்றைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தி வாசிப்பார்.<br>• தனக்குக் கருத்துத் தெரியாத சொற்களின் பொருளை அச் சொல்லுக்கு முன்னால் அல்லது பின்னால் உள்ள சொற்களின் கருத்துக்களை அல்லது மொழியமைப்பின் அறிவைக் கொண்டு அறிந்து கொள்வார்.<br>• பந்தியொன்று எழுதப்பட்ட நோக்கம், தன்மை ( Persuasive, informative, fact/ opinion) என்பவற்றை அடையாளம் காண்பார்.<br>• ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணங்கள், கருத்துக்களுக்கு இடையே உள்ள தொடர்புகளை அடையாளம் காண்பார். எதிர்கருத்தா/ ஒரே கருத்தையே கூறுகிறதா என்ற வகையில் அடையாளம் காண்பார்.<br>• தனது எண்ணங்களை, அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கு தொடர்புள்ள, பொருத்தமான தகவல்களை வாசிப்பின்போது பெற்று அவற்றை ஒழுங்குபடுத்துவார்.<br>• தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு அல்லது பிரச்சனை ஒன்றைப் பற்றி அதன் தன்மை காரணிகளை அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் வாசிக்கும் போது குறிப்புக்களை எழுதிக் கொள்வார். | பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள்.<br>ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்படும் கட்டுரைகள்<br>மேல்வகுப்புக்களில் பயன்படுத்தப்படும் நூல்களிலிருந்து பெறப்பட்ட பாடத்தலைப்புகள். | |

## எழுத்து 5.4

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள். (Indicators) | உபகரணங்கள். | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| வேறுபட்ட தலைப்புக்களைக் கொண்ட கட்டுரைகள், கடிதங்கள், கதைகள், பாடல்கள், அறிக்கைகள் என்பவற்றைப் பயன்படுத்தி செய்திகள், உண்மைகள், அபிப்பிராயங்கள், சம்பவங்கள் என்பவற்றை விளக்கி எழுதுதல்<br>தனது சொந்த அபிப்பிராயங்களை எழுத்து மூலம் வெளியிடுதல். | கதைகள், அறிக்கைகள், பாடல்கள், செய்திகள். விளம்பரங்கள். | • எழுதும் கட்டுரைகள் பந்திகளுக்கேற்றபடி இலக்கணத்தில் வேறுபட்ட காலங்களைப் பயன்படுத்துவார்.<br>• முதலில், அதன்பின்னர், இறுதியாக முதலிய சொற்களைப் பயன்படுத்திக் கருத்துக்களை எழுதுவார்.<br>• தரப்பட்ட கருத்துக்கள் அபிப்பிராயங்களைக் கொண்டு அவற்றிடையே ஒற்றுமை, வேற்றுமைகளை அடையாளம் காண்பார்.<br>• குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழக்கமாகப் பயன்பட்டுவரும் வேறுபட்ட மொழிவடிவங்களை உரியவாறு பயன்படுத்துவார்.<br>• கட்டுரைகளை, பந்திகளை எழுதுவதற்கு உசாத்துணைகளைப் பயன்படுத்துவார்.<br>• எழுத்துப்பிழைகளைச் சரிபார்க்க, வேறு ஒத்தகருத்துச் சொற்களைப் பயன்படுத்தி எழுதவும் அகராதிகளைப் பயன்படுத்துவார்.<br>• கதைகள், அறிக்கைகள., செய்திகள், பாடல்களை எழுதுவார். | தமிழ் – ஆங்கில<br>தமிழ் – தமிழ் அகராதிகள்.<br><br>ஞாயிறு பத்திரிகைகள்,<br>இந்தியா ருடெ (Tamil )<br>கல்கி, கலைமகள்,<br>ஆனந்தவிகடன். குமுதம்.<br>இலங்கைத்தமிழ்ப் பாடநூல்கள். | |

## Level 6

இத்தரத்தில், பொழுதுபோக்கு, கல்வி, உறவுமுறை முதலானவும் இளைஞர்களுக்குக் கவர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதுமான தலைப்புக்களில் செய்திகளையும் அபிப்பிராயங்களையும் கருத்துப்பரிமாறக்கூடிய தன்மையை அடைவர். உசாத்துணைகளை வாசித்து, ஆராய்ந்து விடயங்களை மீள ஒழுங்கு செய்து கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் மற்றையோருக்கு எழுத்து மூலம், அல்லது உரையாடலின் மூலம் முன்வைக்கவும், குழுவாக இத்தலைப்புக்களில் உரையாடும்போது சிறப்பான முறையில் பங்கு கொள்ளவும் தகைமை பெறுவர். “ 2100ம் ஆண்டில்---"முதலிய தலைப்புக்கள்.

இத்தரத்தில் மாணவர் ‘வினாக்களுக்கு விடையளித்தல்’ என்ற நிலைக்கு அப்பால் பல்வகைப்பட்டவர்களுடனும் தாமாகவே ஆர்வத்துடன் கருத்துப்பரிமாற்றங்களை ஆரம்பித்து அல்லது பிறர் ஆரம்பிக்கும்போது ஆர்வத்துடன் பங்குபற்றி, தமது கருத்துக்களை வழங்குவதற்கு தமிழ் மொழியைப் பயன்படுத்துவர். தனிப்பட்டவர்கள், அறிமுகமானவர்கள் என்பவர்களுடன் மட்டுமன்றி பொது இடங்களிலும் மொழியைச் சரளமாகப் பயன்படுத்துவர். மாறுபட்ட எழுவாய் செயப்படுபொருள், செய்வினை, செயற்பாட்டுவினை, அடைமொழி, விசேடணங்கள் முதலியவற்றையும் நல்ல முறையில் பயன்படுத்துவர். விபரித்தல், உதாரணங்களுடன் விளக்குதல், மேலும் கருத்துக்களைச் சேர்த்தல் முதலானவற்றை எழுத்து மூலமும் பேச்சு மூலமும் வெளிப்படுத்துவர். முதலில், அதற்குமுதல், பின்னர், என்ற சொற்களை உதாரணமாக “படித்தபின் வீணை வாசிக்கப் போகிறேன்” என்ற வகையில் பயன்படுத்துவார்கள். இந்நிலையில் மாணவர்கள் தமிழ் மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள அடிப்படை மொழியமைப்பு வேறுபாடுகளை விளங்கிக் கொள்வர். இது இவர்களுக்குச் சிறிது விரக்தியளிப்பதாக இருந்தாலும் இருமொழிகளையும் மேலும் விரிவாகக் கற்க இவ்வறிவு உதவும் வகையில் கற்பிக்கப்பட வேண்டும். மொழி, இலக்கணம் என்பவற்றுக்கான விதிகள் மொழிக்கு மொழி வேறுபட்டதென்பதையும் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் பொருத்தமற்றதென்பதையும் அறிவர். தமிழ்பேசும் நாடுகளுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் வாழ்க்கைச் செலவு, வாழிடம் முதலான விடயங்களில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிவர். சாதிமுறை, வீடில்லாப் பிரச்சனை, வாழ்க்கைத்தர இடைவெளி, கல்வி முறை முதலியபற்றி தமிழ்பேசும் நாடுகள் தொடர்பாக அறிந்து கருத்து வெளியிடுவார். அந்நாடுகளில் கருத்துக்களை முன்வைக்கும் விதம், மக்களின் மாறுபாடான விருப்புக்கள், என்பவற்றையும் அவற்றுக்கான பின்னணிகளையும் அறிவார்கள்.

## Level 6

### Context of language use

இத்தரத்தில் மாணவர்கள் தமது முன்னைய அனுபவங்களைக் கொண்டும் முன்பு கற்ற விடயங்களையும், தொடர்பு சாதனங்களின் மூலம் பெற்ற அறிவையும் ஏனைய பிரதான பாடங்களிலிருந்து பெற்ற அறிவு, அனுபவங்களைக் கொண்டும் வழங்கப்படும் கட்டுரைகள், பந்திகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்க, பதில் கூற விளக்கமளிக்கக்கூடியவராவார்.

### Tasks

- இத்தரத்தில் வழங்கப்படும் தமது அறிவை பிரச்சனை தீர்த்தல், காரணங்காணுதல், விளக்கமளித்தல், விபரித்தல், பிரயோகித்தல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடியவாறு அமையும். மேலும் வினாக்களும் பந்திகளும் மதிப்பீட்டுச் செயற்பாடும், அட்டவணைகள், சட்டகங்கள், விளக்கப்படங்களைக் கொண்டனவாகவும் எழுத்துமூலமானவையாகவும் அமையும். மாணவர்கள் தகவல்கள், உண்மைகள் ஆகியவற்றுக்கும் அபிப்பிராயங்கள் கருத்துக்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும் பக்கச்சார்பான பக்கச்சார்பற்ற தன்மைகளையும் விளங்கக்கூடியதாக இருக்கும்.
- இணையத்தளங்களில் தேவையானவற்றைப் பெறவும் குறிப்பிட்ட ஒரு தளத்தினை நோக்கும் போது அவசியமான தகவல்களை உடன் பெறவும் இணையத்தளங்களில் உரிய இடங்களில் தேடித் தேவையான தரவுகளையும், புள்ளிவிபரங்களையும் பெறவேண்டும்.
- எழுதுதல் என்ற செற்பாடு கதைகள், பாடல்கள், தொடர்புசாதனங்கள் மூலம் பெறப்பட்ட பெரிய வெளியீடுகளாக குறிப்பாகப் பல பக்கங்கள் கொண்டவையாக அமையும்.
- உரையாற்றுதல், பேச்சுக்கள் என்பன பலவகைப்பட்ட தகவல்கள் கொண்டனவாக தெரிவுசெய்தல், ஒழுங்குபடுத்தல், சிறந்த அமைப்பாக்கி முன்வைக்கப்படுவனவாக இருக்கும்.
- வேறுபட்ட இலக்குக்குழுவினராகிய சபையினருக்கு, துண்டுப்பிரசுரம், குறிப்புக்கள், கணனி, தொலைக்காட்சிப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், சஞ்சிகைகளாக அமையும்.

### Texts

பந்திகள் மிகப்பெரிய பக்கங்கள் கொண்டதாக வேறுபட்ட அமைப்புக்கள், முன் அறிந்திராத சொற்களஞ்சியங்கள், செறிவான மொழிப்பிரயோகம், செறிவான கருத்துக்கள் கொண்டனவாகவும் மாணவர்களுக்கு அறிமுகமான தலைப்புக்களையும், ஒழுங்மைப்பையும் கொண்டனவாக இருக்கும்.
மாணவர்கள் உண்மைச் சம்பவங்களைத் தொகுத்தெழுதப்பட்ட, உண்மைச் சம்பவங்களை தழுவி எழுதப்பட்ட, அல்லது கற்பனையில் எழுதப்பட்ட, அல்லது உண்மைக் கருத்துக்கள் தொகுத்தெழுதப்பட்ட பல பந்திகளை வாசிக்கவும், விளங்கிக் கொள்ளவும் வேண்டும்.
இப்பந்திகள் நோக்கத்திலும் அமைப்பிலும் வேறுபட்டதாக இருப்பதோடு, உரையாடலாகவோ, கணனியில் உருவாக்கப்பட்ட பக்கங்கள், அட்டவணைகள், படங்களாக சம்பவங்களாகவோ அமையலாம். வேறுபட்ட பக்கங்களைக் கொண்ட பக்கச்சார்பாக அல்லது பக்கச் சார்பற்று எழுதப்பட்டனவாக இருக்கலாம்.
இவற்றை வாசித்து மாணவர்கள், தாமாக சுருக்க அறிக்கைகள், கருத்துத்திரட்டுக்கள், தொகுப்புக்கள், ஆகியவடிவங்களில் எழுதுதல் வேண்டும்.

கேட்டல் **6.1**

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள.<br>( Indicators') | உபகரணங்கள் | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| பிரபலமான தலைப்புக்கள், எண்ணங்கள்,கலாசாரம், பண்பாடு தொடர்பான விடயங்களை பல மூலகங்களிலிருந்தும் பெற்று, கேட்டு வாசித்து அவற்றினைப் பற்றிய விளக்கத்தை, தொகுப்பை, சுருக்கத்தை அல்லது அவை தொடர்பான அபிப்பிராயங்கள் எண்ணங்களை வேறு வடிவங்களில் வெளிப்படுத்துதல். | வானொலிச் செய்தி, தொலைக்காட்சி செய்தி, உரையாற்றல்கள், பட்டிமன்றம். | • கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கேட்கும் போது மொழியறிவையும் ஏனைய பிற பாட அறிவு வளங்களையும் பயன்படுத்துவார்.<br>• சொற்றொடர்கள் வாக்கியங்களின் அமைப்புக்களுக்கும் இலக்கண கால வரிசைகள் தொடர்புகளுக்கும் தொடர்புகள் உண்டென்பதை அறிவார். Time line படி<br>• காரணகாரியத்தொடர்புகள், ஒற்றுமை வேற்றுமை அம்சங்கள் என்பனவும் வாக்கிய அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டுள்ளமையை விளங்கிக் கொள்வார்.<br>• ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் அபிப்பிராயங்களை ஒப்பீடு செய்வார்.<br>• கேட்டவிடயங்களை வைத்துக் குறிப்புக்களை அல்லது சுருக்கங்களை எழுதும் போது பிரதான கருத்துக்களைத் தெரிவு செய்யவும் அவற்றை ஒழுங்காக வரிசைப்படுத்தவும் வல்லமை பெறுவார்.<br>• கேட்டுப் பெற்ற தகவல்களை பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், தீர்க்கப்படும் பிரச்சனைகளுக்கு அல்லது தீர்வுகளுக்குச் சான்றாகக் கூறவும் பயன்படுத்துவார்.<br>• கேட்டவற்றிலிருந்து பெற்ற தகவல்களைப் பற்றிய தனது கருத்தை, அபிப்பிராயத்தை ஆதரித்தோ எதிர்த்தோ அல்லது தகவல் தெரிவிக்கும் வடிவிலோ தெரிவிப்பார். | Tape recorder<br>CD<br>Video | |

பேசுதல் **6.2**

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள். ( Indicators) | உபகரணங்கள் உசாத்துணைகள். |
|---|---|---|---|
| இளஞ்சமூகத்தினருக்குப் பொருத்தமான தலைப்புக்களில், கருத்துக்களை முன் வைத்துப் பேசவும், உரையாற்றவும், கலந்துரையாடவும், இவ்வாறு நடைபெறுவனவற்றைக் கேட்டு விளங்கிப் பங்குபற்றவும் வல்லமை பெறுதல். | வானொலிச் செய்தி,<br>தொலைக்காட்சி செய்தி,<br>உரையாற்றல்கள்,<br>பட்டிமன்றம். | குறிப்பிட்ட மொழி வடிவத்துடன் மட்டும் நின்றுவிடாது பரந்துபட்ட மொழியறிவைப் பயன்படுத்தி கேட்கப்படும் பந்திகளுக்கு வேறுபட்ட/ மாறுபாடான கருத்துக்களை முன்வைப்பார்.<br>இரண்டு நிமிட உரையாற்றலுக்கு அல்லது குறைந்தது எட்டுத் தொடர்ச்சியான வினா விடை பகர்வதற்கு ஏற்ற வகையில் கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வார்.<br>பொருத்தமான வகையில் ஒரு உரையாடலை அல்லது வாய்மூலமான தொடர்பை ஆரம்பித்து, பங்குபற்றி, நல்ல முறையில் நடத்தி, ஒழுங்காக நிறைவு செய்வார்.<br>தரப்பட்ட தகவல்கல்களுக்கு அல்லது செய்திகளுக்கு மேலும் தனது ஆதாரங்களை கருத்துக்களைச் சேர்த்து அதன்/ அவரின்/ அந்த விவாதத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தி உரையாற்றுவார். அல்லது தனது கருத்துக்களை எனது அபிப்பிராயப்படி---நான் நினைக்கிறேன்---என்ற வகையில் தெரிவிப்பார்.<br>இரண்டு கருத்துக்கள் செய்திகளுக்கிடையில் விடுபட்டுப்போன அல்லது தேவைப்படுகின்ற கருத்தைப் பிறரிடம் கேட்டு விளக்கம் பெறவும், அல்லது அவ்வாறான விளக்கத்தைத் தான் பெறவும்,அல்லத ஒரு கருத்தை மேலும் உறுதி செய்யும் வகையிலும் உரையாட வல்லமை பெறுவார்.<br>பிரதிப்பெயர்கள், அடைமொழிகள், விசேடணங்கள், வேற்றுமை உருபுகள். இணைப்புச்சொற்கள் என்பவற்றை நல்ல முறையில் கையாளுவார். உ–ம் மூன்றுமாதங்கள் யாழ்ப்பாணத்தில் சுற்றுலா சென்ற எனது நண்பர் நேற்றுத் திரும்பினார்.<br>உரையாடலைத் தொடரும் வகையில் உத்திகளை என்னால் உறுதியாகக் கூறமுடியவில்லையே.<br>நீங்கள் இப்படித்தான் கூறுகிறீர்களா?<br>அவ்வாறு கூறினால் என்ற வகையில் பயன்படுத்தி உரையாடுவோம். | Tape recorder<br>CD<br>Video |

வாசித்தல் 6.3

வாசிக்கும்போது, கருத்துக்கள், அபிப்பிராயங்கள், சம்பவங்கள்,பாத்திரங்கள் தன்மைகள், கலாச்சார அம்சங்கள் முதலான விடயங்களை அடையாளங் காணுதல்.
வாசிப்புக்குரிய விடயங்கள், கற்பனைப் படைப்புக்களாக, உண்மைச் சம்பவங்களாக,அபிப்பிராயங்களாக அமையலாம்.
வாசித்த தனது சொந்த அபிப்பிராயத்தை கருத்தை, தீர்வை, ஒப்பிட்டுக் கூறலைத் தெரிவித்தல்.

செயற்பாடுகள்

பந்திகள்,
கட்டுரைகள்,
கைநூல்கள்.
ஆக்கங்கள்.

நடத்தை நோக்கங்கள். ( Indicators)

- அட்டவணைகள், சொற்கஞ்சியங்கள், பட்டியல்கள், அகராதிகள் முதலியவற்றையும் ஏனைய உசாத்துணை மூலங்ளையும் வாசித்து செய்திகள் கருத்துக்களைச் சேகரிப்பார்.
- பந்தியை வாசித்து அது எழுதப்பட்ட நோக்கம் அதன் பிரதான கருத்து, அதில் அடங்கிக் கிடக்கும் உண்மைகளை அடையாளங் காண்பார்.
- பந்தியில் காணப்படும் மூலாதாரமான சொற்களை வைத்துக் கொண்டும் பந்தியமைப்பைக் கொண்டும் சம்பவங்களின் கருத்துக்களின் தொடர்ச்சியை, வரிசையை அடையாளங் காண்பார்.
- தன்கூற்றுவாக்கியம், பிறர்கூற்றுவாக்கியம், வியங்கோள்வாக்கியம், வினாவாக்கியம், செய்வினைவாக்கியம், செயப்பாட்டுவாக்கியம் முதலியவற்றை அடையாளங் காண்பார்.
- மரபுச் சொற்றொடர். அடுக்குமொழி, பழமொழி என்பவற்றையும், பண்பாட்டின் வகையையும் விளக்கமளிப்பார்.
- மூலக்கருத்துக்களை, அடிப்படையான அபிப்பிராயங்களை பொருத்தமான விளக்கங்களுடன் தெரிவு செய்யவும் வரிசைப்படுத்தவும், ஒப்பிடவும் ஏற்றவகையில் வாசிக்கும்போது குறிப்பெடுப்பார்.
- வாசிக்கப்பட்ட விடயம் பற்றிய தனது விளக்கத்தை, தனது எண்ணத்தை முன்வைப்பார்.

உபகரணங்கள்

சஞ்சிகைகள்
புத்தகங்கள்
பாடநூல்கள்.

உசாத்துணைகள்.

எழுத்து **6.4**

| | செயற்பாடுகள் | நடத்தை நோக்கங்கள். ( Indicators | உபகரணங்கள் | உசாத்துணைகள். |
|---|---|---|---|---|
| சமுதாயங்களுடன் அல்லது கலாச்சாரம் பண்பாடு என்பவற்றுடன் தொடர்புபட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பாக நிஜமாக அல்லது கற்பனையாக எழுதப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தனது யோசனைகள், அபிப்பிராயங்களை கடிதங்கள், கதைகள், கருத்துத்தொகுப்புகள், அறிக்கைகள் வாயிலாக எழுதுதல். | பந்திகள்,<br>கட்டுரைகள்,<br>கைநூல்கள்.<br>ஆக்கங்கள். | • குறிப்பிட்ட தகவல் ஒன்றை அல்லது செய்தித் தொகுப்பை விரிவுபடுத்தி எழுதுவார். உ–ம் " எனது நண்பி கவிதா என்னுடைய தம்பி அழகானவன் என்று எண்ணுகிறான் நான் அவன் தற்புகழ்ச்சிக்காரன் என்று கூறுவதை அவள் நம்புகிறாள் இல்லை."<br>• சம்பவங்களையும் அதுநடைபெற்ற காலங்களையும் இணைவுபடுத்துவார். உ–ம் " இரவு உணவிற்கு முன்பு----பின்னர்------நடைபெற்றபோது"<br>• யாருக்காக எந்த நோக்கத்தில் எழுதப்படுகிறதோ அதற்கேற்றபடி பொருத்தமாக எழுத்து வடிவங்களை மாற்றி எழுதுவார்.<br>• கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வேறு பிரித்தறியவும் தொடர்புபடுத்தவும் வல்லவராவார்.<br>• வாக்கியங்களை. கருத்துக்களை இணைப்பதற்கு இணைப்புச் சொற்களை பொருத்தமான முறையில் பயன்படுத்தி எழுதுவார். ( இடைச்சொற்கள், உரிச்சொற்கள்) | சஞ்சிகைகள்<br>புத்தகங்கள்<br>பாடநூல்கள். | |